முரசொலி

முரசு 1 | சென்னை | 25 — 6 — 54 | வெள்ளி | ஒலி 13

போட்டி போடாதீர்! :: :: புறமுதுகு காட்டாதீர்!

கல்கி அய்யர் சவால்!!!

அகோ, வாரும் பிள்ளாய்! ...ரிய எதிர்ப்பாளனே! அதிர் ...வேட்டு சூரனே! சூறுவளி ...யெனப் பாய்ந்து வந்த வீரனே! ...அனலும் கனலும் பறக்க ஆர்த் ...தெழுந்த அன்பனே! சென்ற ...முப்பத்தைந்து ஆண்டுகளாக ...தீமை பயக்கும் துவேஷப் பிரச் ...சாரத்தைச் செய்து எங்கள் இன ...நலத்தைக் கெடுத்து விடலா ...மெனக் கங்கணம் கட்டினீர்களே ...சாய்ந்ததா உங்கள் ஜம்பம்? ...மதத்தின் பேரிலும் தெய் ...வத்தின் பேரிலும், ஆலயங் ...களின் பேரிலும், பழம் பெரும் ...தமிழ் நூல்கள் பேரிலும் உச்சிக் ...குடுமியின் பேரிலும் பாய்ந்து ...பார்த்தீர்களே; நடந்ததா உங்கள் ...காரியம்? அப்பப்பா; எங்கள்சமு ...தாயத்திற்குக் கிடைத்த உன்னத ...ள—உல்லாசமான தனி ...வாழ்வை எப்படியும் ஒழித்து ...விட்டு நீங்களும் எங்களைப்போல ...வாழ்ந்திட எப்படி யெப்படியோ ...எல்லாம் போட்டுப் பார்க்கிறீர் ...—அய்யோ பாவம் அது ...பலிக்கவேயில்லை-அழுது அழுது ...கிறீர்களே தவிர எம்மை ...அழித்திட ஆகுமா உம்மால்? ...உத்தியோகமெல்லாம் எங்களுக் ...கே கிடைக்கிறது அதிகமாக ...என்பதற்கு புள்ளி விபரங்க ...ளோடு ஆதாரங் கொடுத்தீர் ...—இன்னும் கொடுத்துக் ...கொண்டிருக்கிறீர்கள் — புள்ளி ...விபரம்தான் கொடுக்க முடிந் ...தது தவிர—எம்மினத்திலேஒரு ...புள்ளியைக் கூட உம்மால் ஒடித் ...திட முடியவில்லை. ஆகா! தமிழ் ...தூங்கிவிடும்; இந்திக்கு ஆதிக் ...கம் கூடாது என போர் முரசு ...கொட்டி தார் கொண்டு அழித் ...தீர்; இந்தி எழுத்துக்களை! ...அழிந்துவிட்டதா அன்னை பாரத ...ம் ஈன்றெடுத்த தேசியத்திரு ...மொழியாம் இந்தி மொழி! ...நாடு — ஆரியர் — என்றெல் ...லாவோ பேசிப் பார்த்தீர் ...வாகை மாலை சூட முடிந்த

தா உங்களால்! அழிக்க முடியா தப்பா—அக்கிரகாரம் ஆண்டவ னிடம் பெற்ற தனி அருளை! அந்த அருள், இருள் எனப் பேசப்பட்டது உங்களால்; மன மருள் என ஏசப்பட்டது உங்கள் கூட்டத் தால்! தமிழ் நாட்டு மக்கள் உங்கள் பேச்சைக் காதிலே போட்டுக் கொள்ளவில்லை. நாங்கள் அவர் களை எந்த அளவுக்கு ...மைகளாக்கி வைத்திருக் கிறோம் என்பதைப் புரிந்து கொண்டும் — அந்த பரிதாப ஜீவன்களிடம் போய் செவிடன் காதில் சங்கென ஏன் முழங்கு கிறீர்கள்? உங்கள் முழக்கத்தால் தமிழ்நாடு விழிப்படைந்துவிடும்-வீறுகொண்டுவிடும்.எம் இனத்து தனி நலனை விரட்டிவிடும் என் றெல்லாம் வீண்கனவு காணாதே வீரனே! தமிழ்நாடு இப்போது எழாது! அந்த தூக்கத்தை யாரா லும்கலைக்கவும் இயலாது! எம்மை எதிர்த்தவரெல்லாம், பின்னர் மண்டியிட்டுக் கவிழ்ந்தார்களே தவிர வெற்றிக்கொடி ஏந்தி வீர உலாபாடியதுகிடையாது. இதோ பார், ஒரு உதாரணம்—எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன் என சூளுரைக் கிறாயே, சுத்த வியாபார நோக்கம் தெரியாத சிறுபிள்ளையே! உனக்குத் தெரியுமே—ராமசாமி முதலியாரை—ஆமாம் பார்ப்பன ரல்லாதாருக்கு பாடுபடுவதாகச் சொன்ன அந்த தலைவரை-பெரிய நிபுணரை! அவர் என்ன ஆனார் தெரியுமோ? பதினெட்டு ஆண்டு களுக்கு முன் அவர் எமது சத்தியமூர்த்தி அய்யருடன் போட்டி போட்டார். நாங்கள் தேர்தல் பிரச்சாரத்திலே பச்சை யாகவே பொய் சொன்னோம்; தாலியறுத்தவர் ராமசாமி முதலி யார்—அவருக்கு வாக்கு அளிக் காதீர் என்று!

அத்தகைய எமது எதிரி ராம சாமி முதலியார் இப்போது எப்படி பணிந்துவிட்டார்? கட்சிகளைக் கடந்து உன்னத நிலை பெற்றுவிட்டார். சமயப்பற்றும் ஆலய தரிசனத்திலே ஆர்வமும் உடையவராகி விட்டார். சூழ்ச்சிக்காரன் பிராம ணன் என்று கூறியஅவர் —சுதந்திரம் நமக்கல்ல சுயநலமிகளுக்கு என்று முரசடித்த அவர்—இன்று சுதந் திர பாரதத்தின் சேவகராகவே ஆகிவிட்டார். சத்தியமூர்த்தியை எதிர்த்தார். இன்றோ எமது பக் தராக நிற்கிறார். அவரை எந்தத் தொகுதியிலும் நிற்க வைத்து வெற்றி பெறச் செய்யும் வலிமை எங்களுக்குத்தான் இருக்கிறது. ஏன், இப்போது தான் என்ன — பொதுமேடை, நாடகமேடை, சினிமாத்திரை, பத்திரிகை, குறைந்த விலைப்பிரசுரம் இவைகள் மூலமெல்லாம் எம் ஆதிக்கத்தை அழித்து விட்டு திராவிட ராஜ் யத்தை, திராவிடர் நன்மைக்காக புதிய அரசை, பொதுவுடமை ஆட்சியை நிறுவ திட்டமிட்டு வேலை செய்தும் கூட எங்கள் ஆதிக்கத்தை அணுவும் அசைக்க முடியவில்லை. தூங்கும் மக்கள் தொகை ஏராளம் — என்னதான் நீங்கள் ஏங்கினாலும் அவர்களை எழுப்பிட முடியாது. இல்லா விட்டால் சென்ற பொதுத் தேர் தலில் சென்னை நகர்ப் பார்லி மெண்ட் தொகுதிக்கு டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும், மத்ய தொகுதிக்கு டாக்டர் கிருஷ்ணரா வும், தாம்பரம் தொகுதிக்கு ராம கிருஷ்ண அய்யரும், திருநெல் வேலித் தொகுதிக்கு சோமியா ஜுலு வாளும் தேர்ந்தெடுக்கப் பட முடியுமா?

ஆரியத்தை எதிர்க்கிறார் களாம் — ஆரியரை விரட்டு கிறார்களாம் — பார்த்தாயா பட்டி யலை! பார்ப்பன தேவர்களின் பலத்தை — இன வளத்தை — குறைத்து விட யாராலும் முடி யாதப்பா! நெல்லிக்காய் மூட்டை போல உன்னுடைய சமுதாயம் சிதறிக் கிடக்கும் வரையில் — அந்த சமுதாயத் தின் முதுகில் ஏறி நாங்கள் சவாரி செய்வதை நிறுத்த மாட் டோம் — உனக்கு எச்சரிக்கி றேன் — புத்தியுள்ள வனாக யிருந்தால்—என் பேச்சைக்கேள், ராமசாமி முதலியாரைப் போல தாசானுதாசனாக மாறிக்கொள்! அகில உலகப் புகழாவது மிச்ச மாயிருக்கும் — அதைவிட்டு விட்டு எம்மை அடக்கிவிட முயல்வது வெறுங்கனவாகப் போய் விடும் என்பதை மட்டும் மறவாதே! முடியுடை வேந்தர் கள்—குடி படைச் சீமான்கள்— அனைவருமே எமது ஆதிக்கத் துக்குத் தலை வணங்கித்தீரவேண் டும்! நீ எம்மாத்திரம்? நீ கட்டி யழும் தமிழ் நாடோ, திராவிட நாடோ அந்த நாட்டு மக்களின் இமைகள் மூடி யிருக்கும் வரை யில் கிட்டவே கிட்டாது! அந்த இமை திறக்கவும் நாங்கள் விட மாட்டோம்! உமையின் பக்கம் அவர் தம் உள்ளத்தை இழுப் போம்—பாபச் சுமையை எந்த தீர்த்தத்தில் இறக்குவது என்று உபதேசிப்போம் — எப்படியோ அவர்கட்கு நீங்கள் உத்தி யோக ஆசை காட்டினாலும், பொதுவுடமைப் பூங்காவை எதிர்நிறுத்தி அழைத்தாலும், சமதர்ம நாட்டை உருவாக்கி காட்சியாக்கினாலும் வெற்றி என் பது துர்லபந்தான். அந்த அளவு எமது கொள்கை உதிரத்தில் ஊறிப் போய்க் கிடக்கிறது. ராமசாமி முதலியார்கள் பெருகு வார்களே தவிர, ராமசாமிப் பெரியார்கள் பெருகிடமாட்டார் கள்—ஆகவே ஆரியம் வாழும்— அதை வீழ்த்த யாராலும் முடி யாது! திராவிட மக்கள் அனை வரும் ஒன்று சேர்ந்தாலும் முடி யாது என்பதை அறிவாயாக!

[7-ம் பக்கம்]

அமைதி இல்லை அங்கே!

முன்னர் சீன சாம்ராஜ்யத்தை அரசாண்ட ஷாங் வம்சம் சௌ வம்சத்தினரால் அரசு கட்டிலிருந்து விரட்டப் பட்ட போது — கி-ட்சே என்னும் உயர்தர அதிகாரி ஒருவன் "சௌ வமிசத்தவர் ஆளும் நாட்டில் பிரஜையாக வாழ்வதைவிட கொடுமை அரசுபுரியும் காடே மேல்" என சுமார் 5000–மக்களை அழைத்துக் கொண்டு வெளியேறினான். உதய சூரியனை நோக்கி நடந்தபடி இருந்தான். கீழ்க் கோடி முனை வந்ததும் அந்தப் பயணம் தடைப் பட்டது. அந்த சமாதானப் பிரியர்கள் அந்த பூமிக்கு "அதிகாலையின் அமைதி நிறைந்த நாடு" என்று பொருள்படும் கொரியா என்று பெயர் புனைந்தனர்.

அமைதி அடங்கியிருக்கும் அந்த நாட்டில்தான் இப்போது ஏகாதிபத்திய போர் முரசங்களின் காட்டுமிராண்டி ஓசை காதைப் பிளக்கும்படி கர்ஜனை புரிகிறது — நாடு பிடிக்கும் நாசகாலர்கள் அங்கே வட கொரியர்களுக்கும் தென் கொரியர்களுக்கும் சிண்டு முடிந்து விடுகின்றனர். ஜெனிவா மாநாடு — கொரியாவில் உடைப்பெடுத்தோடும் இரத்த வெள்ளத்துக்கு அணை போடும் என்றுதான் உலகமக்கள் எதிர்பார்த்தனர் — அந்த எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டனர், மாநாடு கூட்டியவர்கள்! கொரியப் பிரச்சினை மீண்டும் ஐ. நா. சபைக்குள் நுழையப் போகிறதாம்!

கசாப்புக் கடைக்குள் நுழையும் ஆட்டைப்போல —ஐ. நா. சபைக்குள் கொரியப் பிரச்சினை ஓட்டப்பட இருக்கிறது—அதிகாலையின் அமைதி நிறைந்த நாட்டில் மீண்டும் ஆதிபத்திய வெறியர்களின் பீரங்கி வெடிகள் சப்த மிடலாம்—கொரியாவிலே மீண்டும் போர் முழக்கம்!—கொரிய மக்களால் சகிக்கமுடியாது, இந்தக் கொடுமை—உலகத் தலைவர்கள் வளர விடக் கூடாத நிலைமை—அது!

காலையின் அமைதி நிறைந்த நாட்டில் போர் இடிகளின் பெரு முழக்கம் கேட்கப் போகிறது. பொருந்தாத இந்த காட்சி வளரக்கூடாது. சமாதானத்தில் அக்கரை கொண்டவர்கள் நாடு கவரும் நாசக் கொள்கையை துணிக்க வேண்டும்! அப்போதுதான் உலகம் உருப்படும்.

செங்கோட்டை சரிகிறது!

"காங்கிரசுக்குள் ஏற்படும் உட்பூசல்களை வெளியாருக்குத் தெரியாமலேயே சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்; அஃதன்றி மாற்றார் எள்ளி நகையாடும் நிலையை உண்டுபண்ணக் கூடாது."

—அகர்வால் (காங்கிரஸ் கட்சியின் காரியதரிசி.)

"கட்சியின் தலைவர் முதன் மந்திரி; பூராக் கட்சியின் தலைவராக அவர் இருக்க வேண்டுமே யன்றி எந்த கோஷ்டிக்குமல்ல!"

— நேரு (காங்கிரஸ் கட்சியின் ராஷ்டிரபதி)

— தலைவரும் செயலாளரும் இப்படி கண்ணீர் வடித்திருக்கின்றனர்—இத்தனை நாட்கள் புனுகுப் பூச்சால் மூடிவைக்கப் பட்டிருந்த புண் முடை நாற்றத்தை வெளி அனுப்புகிறது—மெருகுப் பேச்சால் கட்சியின் கருகிப் போன பாகங்களை மறைத்து நின்றவர்கள் அவைகளைப்பற்றி பொதுமக்களுக்கு நேராக பேசக்கூடிய அளவுக்கு நிலைமை சீர்கெட்டிருக்கிறது.

இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஒரே கட்சி—மாற்றுக்கட்சிகளிடமிருந்து . இந்த நாட்டைஆளும் யோக்யதையைப பறித்துக் கொண்ட தலைவர்களின் கோட்டை—அரசியல் அறிஞர்கள் — பொருளாதார விற்பன்னர்கள் — இவர்களெல்லாம் வாழ்ந்திடும் பேட்டை — என்றெல்லாம் உலக அரங்கிலே-அமெரிக்கரின் உப்பரிகையிலே பேசப்படும் காங்கிரஸ் கட்சி இப்படி கலகலத்து நிற்கிறது.

மைசூர் ராஜ்யத்து முதல மைச்சர் அனுமந்தய்யாவுக்கும், பிரதேச காங்கிரஸ் தலைவர் வீரண்ண கௌடாவுக்கும் இடையே ஏற்பட்ட மனக்கசப்பு அதிகமாகி—நேரு தலையிடும் அளவுக்கு மோசமாகி விட்டதாம்.

ராஜஸ்தானிலே ஏற்பட்டிருக்கும் பிளவும் தலைக்கு மிஞ்சி விட்டதாம். நேருவின் கோஷ்டியாரால் இப்போதைய முதன் மந்திரி ஜெகநாராயண் வியாஸ் விலக நேரிடுமாம். அதற்குப் பதிலாக தலைமைப் பீடத்தின் கருணை கடாட்சம் பெற்ற ஹிராலால் சாஸ்திரி அரசு கட்டில் ஏறுவாராம். அதற்காகஇப்போதிருந்தே அவர் பதவி முரசு கொட்டுகிறாராம்; ஆதரவுச் சிந்து பாடுவோர் அவர்பக்கம் சேர்ந்தபடியே இருக்கின்றனராம்.

கட்சி இயந்திரத்திலே ஏற்பட்ட இந்தக் கோளாறுகள் செங்கோட்டையையும் விட்டபாடில்லை. அங்கே பிரம்ம பிரகாஷ் என்பவரும் ஜகபிரவேஷ் என்பாரும் களம் அமைத்து பலப்பரீட்சை பார்க்கிறார்களாம். அரசியல் அரங்கிலே பிரவேசிக்கத் துடியாய்த் துடிக்கும் ஜகபிரவேஷ் நேருஜியின் திருவருள் கிடைக்காத காரணத்தால் வெளியேற்றப் பட இருக்கிறாராம். ராஷ்டிரபதி வாழும் திருப்பதியாம் டில்லி ராஜ்ய காங்கிரசில்—செங்கோட்டையின் வாயிலிலேதான் இப்படி அபிப்பிராயபேதக்கள்ளிகள் பரப்பப் பட்டிருக்கின்றன. யாரை ஆதரிப்பது — யாரை ஒதுக்குவது என்பது அறியாமல் நேரு திக்கு முக்காடிக் கொண்டிருக்க – பிரதேச காங்கிரசிலே உள்ளவர்கள் எதிர்ப்புக் கரகோஷங்கள் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கட்சி என்று இருந்தால் உட்பூசல் இல்லாமலா இருக்கும் என்று வினா எழலாம். ஆனால் அந்த பூசல்கள் கொள்கை அளவிலே எழுந்தவையாய் இருக்க வேண்டும். இங்கிலாந்திலுள்ள லேபர் கட்சியிலும்தான் பெவானுக்கும் ஆட்லிக்கும் மிடையே பூசல் இருக்கிறது; ஆனால் அவையெல்லாம் கொள்கை காரணமாக எழுந்தவை. இங்குதான் கேள்விப்படுகிறோம் பதவி வேட்டை கொள்கையாக — லஞ்ச வரப்பே கடைப் பிடிக்கும் இலட்சியமாக—பூசி மறைப்பதையே நேரடி நடவடிக்கையாகக் கொண்டு அரசியல் வானில் நிரந்தர சூரியனாக ஒளி விடநினைக்கும் கட்சி யொன்றை!

போர்ப்பரணி பாடி எதிரிகளின் விலாவிலே வேல் பாய்ச்ச வேண்டிய தளகர்த்தர்கள்-தரணி ஆளும் மோகம் கொள்ள அதன் காரணமாக அகில மெங்கும் கொடி உயர்த்தி வாழ்ந்த ரோம சாம்ராஜ்யம் வீழ்ந்த நிகழ்ச்சி காங்கிரஸ்காரர்களுக்கு, அதுவும் பண்டிதருக்கு புதிதல்ல; உலக வரலாறு எழுதியவரல்லவா அவர்! இருந்தும் கதர்க்குல்லாய் அணிந்தவர்களெல்லாம் மந்திரி பதவிக்காக சண்டையிடுகின்றனர்; தாங்கள் திறமை சிறிதுமில்லா பதர் என்பது தெரிந்திருந்தும் கூட!

அறுபத்தாறு ஆண்டுகளாக இந்திய உபகண்டத்து மக்களின் உள்ளம் தழுவி—வெள்ளையனை விரட்ட பற்பல உயிர்களை ஈந்து-மக்கள் வெள்ளம் வெற்றிப் பாயிரம் பாட, ஆட்சி பீடம் பெற்றவர்களுடைய கட்சி சுதந்தரம் கிடைத்த ஏழே ஆண்டுகளுக்குள்—கொள்கை கீதம் பாடிய வீரர்கள் சொந்த கூடாரத்தை விட்டு வெளியேற, நாடி தளர்ந்து மரண மண்டலத்துக்கு ஏகியபடி இருக்கிறது. ஆம் செங்கோட்டை சரிகிறது — பதவிக் கரையானும்—ஊழல் என்னும் பெருச்சாளியும் அதன் அஸ்திவாரத்தை அரித்து விட்டன!

இலங்கை தி. மு. க.

★

இலங்கையிலுள்ள தி. மு. க. கிளைக் கழகங்களின் நிர்வாகிகள் தேர்தலை கூடுமானவரை ஒரு மாத காலத்திற்குள், நடத்தி முடித்துவிட வேண்டுமென, அறிக்கைகள், கடிதங்கள், மூலம் வேண்டிக் கொண்டிருந்தோம். அதன்படி பல கிளைகள் தங்களின் தேர்தல்களை தலைமை நிலைய ஒப்புதலுடன் நடத்தி முடித்து, தங்களின் ஈவுத் தொகையையும் செலுத்தி விட்டன என்பது குறித்து மகிழ்ச்சி யடைகின்றோம். ஆனால் சில கிளைக் கழகங்கள், சட்ட பூர்வமாக, தங்களின் தேர்தல்களை இன்னும் நடத்த வில்லை.

இலங்கையில் ஒரு சிறந்த அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டுமென்ற திடமான எண்ணம் இயக்கத் தோழர்கள் பலரிடம் இருக்கின்றது, என்பதை யாரும் மறுக்க முடியாது. இனிமேலும் இக்கிளைக் கழகத் தேர்தல் காலத்தை நீட்டிக் கொண்டு போவதில் பிரயோசனமில்லை. அந்தக் கிளைக்கழகங்கள் ஜூலை 15க்குள் எப்படியாவது தேர்தல்களை "சட்டபூர்வமாக" நடத்தி தலைமைக் கழகத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டுமென கூறுகின்றோம். ஜூலை 15க்கு மேல் நடைபெறும் கிளைக் கழகத் தேர்தல்கள் "சட்ட பூர்வமான"தாகக் கருதப்பட மாட்டாது என்பதுடன் அந்தக் கிளைகளின் பிரதிநிதிகள் பொதுக்குழு தேர்தலில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் இழந்து விடுவர் என்பதையும் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்

இ. தி. மு. க.

தலையங்கம்

சென்னை (25—6—54) வெள்ளி

வேல் பெற வாரீர்!

பதினாறும் நூற்றாண்டில் ஹாலந்திலுள்ள லெய்டன் பிரதேசத்தின் மீது ஸ்பானியப் படைகள் மூர்க்கத்தனமாகப் பாய்ந்து முற்றுகையிட்டபோது, லெய்டன் மக்கள் முழக்க மிட்டார்களாம் —

"எல்லாம் போய்விட்டது, வேறு வழி இல்லை என்கிறபோது — நீங்கள் எங்கள் திருமனையைத் தீண்டுவதற்கும் பறிப்பதற்கும் இடம் தரோம்! நாங்களே எங்கள் நன்னகருக்குத் தீவைத்து அத்தீயில் நாங்கள் ஆண்கள், பெண்கள், குழந்தை குட்டிகள் — அனைவரும் விழுந்து மடிவோம். நாட்டைப் பகைவன் கொள்வதைப் பார்க்கினும் கடல் கொள்ளட்டும். எங்களைத் தவிர மற்றயாவரும் மடிந்தொழிந்து விட்டால் நாங்கள் எங்கள் இடதுகைகளை உணவாகக் கொண்டு, வலதுகைகளால் எங்கள் தாயகத்து சுதந்திரத்தை அன்னியப் பகைவன் தீண்டாதவாறு பாதுகாப்போம்!"

இப்படி முழக்கமிட்ட அந்த விடுதலை வீரர்கள் எதிரிகளை முறியடித்து வெற்றிக் கொடியும் நாட்டினார்களாம். அந்த வெற்றிச் சின்னமாக லெய்டனிலே சர்வகலாசாலை ஒன்றையும் அமைத்து மகிழ்ந்தார்களாம். தாயகம் எதிரியின் கையில் சிக்கிவிடுகிறது என்பதை நினைக்கவும் அஞ்சிய அந்த வீரமறவர்களின் தீரக் குரலிலே எத்துணை எழுச்சி! எத்துணை உணர்ச்சி! தாங்கள் பிறந்து வளர்ந்த மண்ணை வேற்றான் மிதிக்கும் போது நெஞ்சிலே புண் பெற்றோராய் கிளம்பிடும் சிங்கக் கூட்டம் வரலாற்றுச் சுவடிக்கு புதிய பொலிவு தருகிறது — வருங்கால உலகிற்கு போதிய வலிவும் தருகிறது! இடதுகையை உணவாக்கிக் கொண்டு வலதுகையால் பகைவரை வளைப்போம் என்ற வீர உரையும் — இருகைகளையும் கூப்பி எதிரியின் திருமலரடி தொழுவேன் என்னும் விபீஷண உரையும் — உலக வரலாற்றில் மாறி மாறி ஒலித்திருக்கின்றன. அந்த ஒலியிலே கம்பீரமும் — கடமை உணர்ச்சியும் — கலந்திருக்கிறது என்று சொன்னால் அது பகைவருக்குப் பணியாத அந்த முதல் ஒலிதான். காட்டிக் கொடுக்கும் பண்பும், கையாலாகாத் தன்மையும் கலந்திருப்பது இரண்டாம் ஒலியில்! முதல் ஒலி முழக்கினோரின் அணிவகுப்பு இருக்கிறதே — அதுதான் முடி ஏந்திகளை — அவர் அடி தாங்கிகளை இடிகேட்ட சர்ப்பமென நடுங்கவைத்து — விடுதலைக்கொடி பிடித்த வாலிபர்களின் படை வரிசையாகும்.

அந்தப் படைவரிசை எதற்கும் கலங்கியதில்லை. எதைக் கண்டும் —ஏங்கியதில்லை. வீங்கிய தோளும், விடுதலை வாளும் கொண்டு ஓங்கிய கையைதாழ்த்தாமல் ஒழிந்திடுவோம் எனத் தெரிந்திடினும் ஒளி சிந்தும் விழியில் ஒரு துளி பயமும் படராமல் முன்னேறும் அணிவகுப்பு அது! அந்த அணிவகுப்பு நல்லோரின் வாழ்த்தைப் பெறக் கூடியது. புல்லரின் எதிர்ப்பையும் பெறக்கூடியது. சரித்திரப் பூஞ்சோலையிலே அந்த அணிவகுப்பு ஒரு அழகு ரோஜா! சுதந்திர முல்லைகாட்டில் ஒளியாய் மொய்த்து விட்ட முழு நிலவு அந்த அணிவகுப்பு! கவிகளுக்கோர் எழுச்சி வரி! கடமையாளருக்கு உணர்ச்சிக் குறி!

தாயகத்தின் மடியில் தவழ்ந்தாடும் அன்பு மழலை அந்த அணிவகுப்பு! பணிகுவிக்கும் அந்த அணிவகுப்பு, பூமி நூலில் ஒரு தனித் தொகுப்பு. கனிமொழி கேட்டுப்பல நாளாயினோர் — பனிவிழி கண்டு சில ஆண்டாயினோர் — தாயக விடுதலையெனும் பெரு மூச்சையே தணியாத இன்ப மூச்சாகக் கொண்டு விட்டோர் அந்த அணிவகுப்பில் வந்து விட்டோர். **"இன்ப மணம் பெறத் திரும்பவும் கூடும் — அல்லது எந்தன் பிணம் அந்தக் களத்திலே நாறும்"** என்ற மொழியுரைத்து அத்துடன் எதிரியை வெல்லப் பழியுரைத்து படையினர்க்கு வழியுரைத்துக் கிளம்பிய விடுதலைத் தளபதிகள் எத்தனைபேர் சுதந்திர அன்னையின் மடியிலே சமாதிக் குழந்தைகளாய், கல்லறைச் செல்வங்களாய் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய படைத் தளபதிகளும் படைவீரர்களும் தாயக விடுதலைக்குத் தந்திருக்கும், விலைகளும், தலைகளும், எவ்வளவு? எவ்வளவு? அதையெல்லாம் ஒரு முறை எண்ணிப் பார்த்து, தீயோர் கைசிக்கி விட்ட திராவிடத்திரு நகரையும் திரும்பிப் பார்த்தால் — அய்யகோ! இருதயம் எப்படிக் கனத்துப் போய்விடுகிறது! இடக்கை தின்று, வலக்கையால் நாடுகாப்பேன் என்ற சூளுரையையும், வடக்கே நின்று, தெற்கைத் தின்பேன் எனக் கேட்கும் சூதுரையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் — அப்பப்பா! லியோடன் வாசியை விட அதிகமான உறுதியும், உணர்ச்சிப் பிரவாகமும் நெஞ்சிலே பெருகிடத்தான் செய்கிறது! நமக்கு மட்டுமல்ல; நாடு காக்கும் பட்டியலிலே இடம் பெற்று விட்ட அனைவருக்குமே!

அந்தப் பாசறை நல்லோர் — பட்டாளத்தில் வல்லோர் — தாயக விடுதலை வீரர் — அனைவரும் அணிவகுத்து நிற்கும் அந்தக் காட்சி அதோ தெரிகிறது! அந்தப் பாசறை விளக்கு கண்ணுக்கு நேராக ஜோதிமழை பொழிகிறது. திராவிடத் தாயகத்தை விடுவிக்கும் தேசீய எழுச்சி அதோ — திராவிட முன்னேற்றக் கழகமாக உருவெடுத்து நிற்கிறது. அதுவும் தெரிகிறது. கூடிக் கூடி திட்டங்களைத் தேடித் தேடி விடுதலைப் பண் பாடிப் பாடி பணிபுரியும் போராட்டக் கழகமாம் திராவிட முன்னேற்றக் கழகம், இதோ — வேலூரிலும் கூடுகிறது! திட்டங்களைப் போடுகிறது! தீமைகளைச் சாடுகிறது! எனக்கேள்விப் படுகிறோம் — ஆம் அந்த அழைப்புச் சங்கம் நம் காதிலே ஒலிக்கிறது. வேழத்தை வீழ்த்திடும் வேங்கையெனக் காணும் **ஈழத்து சிவானந்த அடிகளும்**, ஆழத்தில்காணும்கருத்துக்களையும் முத்தெனக் கொணரும் **தோழர் மதியழகன்** அவர்களும் தலைமை ஏற்றிட, பாவலர் பலர் போற்றிடும் தமிழ்க்காவலராம் நம் **நாவலர் நெடுஞ்செழியனும்**, மாவளம் சூழ்ந்த நாட்டிலே, பகைத்தீ தாவலாம் — அதன்மீது நம்படையை ஏவலாம் என முழக்கிடும் மாவீரர் **மனோகரனும்** திறப்பு விழாப்பணி ஆற்றிட, திரைக் காவியக்கலைவாணர் ஓவியக்கண் காட்சி திறந்திட, மேவிடும் புகழ் நடிப்புச் செல்வராம் புதுமை நடிகராம் பொற்புடைத் தோழராம் நண்பர் **ராஜேந்திரன்** நாடக மன்றத்தினர் நல்ல கருத்துக்கள் வழங்கிட — முன்னணிப் படையினர் அனைவரும் எண்ணங்கள் விதைத்திட — வட ஆற்காடு மாவட்டத்து வீரர் எல்லாம் கூடிடும் மாநாடு வேலூரில் நடைபெறுகிறது — தடை நொறுங்குகிறது — தாயகம் புன்னகை புரிகிறது! விடுதலை வீரர்கள் வேல் பெறும் ஊர் வேலூர்! அங்கே அனைவரையும் அழைக்கிறார்கள், வரவேற்புக் குழுத்தலைவர்கள் சாரதியும், கிருஷ்ணசாமியும்! அவர்கள் மாநாட்டுச் செயல் வீரர்கள் — மாவட்ட சீயங்கள்!

ஆதிமூலம், போளூர் சுப்பிரமணியம் மாநாட்டுச் செயலாளர்கள் — மாவட்டத்து மாவீரர்கள் — போளூர் புலியுடன் பொருளாளர் ரங்கநாதனும் அழைப்பு விடுகிறார் — வீரர் பட்டாளத்தை வேலூர் அழைக்கிறது! வேல் பெற வாரீர்! நமது **அண்ணா** தரும்வேல் பெற வாரீர்! விடுதலைக்கான வேல் பெற வாரீர்! விரைந்து வாரீர்! என நாமும் வேலூரின் சார்பாக அழைக்கிறோம். ஃ

புராணக் கதை யொன்று கூறுவார்கள்—மகா விஷ்ணு கருடன் மீதேறி பரமசிவனை தரிசிக்க வந்தாராம். அப்போது சிவனார் கழுத்திலிருந்த பாம்பு, கருடனைப் பார்த்து "ஏன் கருடா! சுகமா?" என்றதாம். அப்போது கருடன், "இருக்கும் ஸ்தானத்தில் இருந்தால் சுகந்தான்," என்று பதில் கூறினாம். அது போல, இருக்கும் ஸ்தானம் கெட்டி யென்று எண்ணிக்கொண்டு கனம் எஸ்.எஸ். ராமசாமி அவர்கள் தி. மு. கழகத்தையும், வன்னியர் தலைவர்களையும் திட்டியிருக்கிறார், திண்டிவனத்தில். காமராசரை பாராட்டுகிறவர்கள் அவர் மந்திரிசபையில் உள்ள என்னை மட்டும் ஏன் கண்டிக்கிறார்கள் என்று அவர் புலம்பவும் செய்தாராம்.

"ஜெகவீரா, சத்தியவதியின் போக்கு எனக்கு பிடிக்கவில்லை மகனே!"

"அம்மா !"

"ஆம் செல்வனே, சத்தியவதி பருவப் பெண், பட்டத்து ராணி, அவள் இஷ்டப்படி வேற்றுடவர்களோடு பேசுவது தகாது, தீக்குளித்த திலகங்களை பெற்றெடுத்த ராஜபுத்ர வம்சத்துக்கே அது அவமானம்!"

"அம்மா, என்ன சொல்கிறீர்கள்? சத்தியவதி என்ன செய்தாள்? யாரோடு சரசம் செய்தாள்? சொல்லுங்கள் !"

"ஆத்திரப்படாதே! நேத்திரத்தைப் போல நீ அவளை நேசிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும்...!"

"என்னம்மா ஆனாலும்......?"

"உன் தம்பியும் அவளும் அடிக்கடி தனித்து உரையாடுவது எனக்குப் பிடிக்க வில்லை ஜெகவீரா! நீ கொஞ்சம் கண்டித்தால் அவள் கட்டுப்பட்டு விடுவாள் என்று தான் சொல்கிறேன்"

"தம்பி அர்தோலைப் பற்றி அப்படி யெல்லாம் தப்பாகச் சொல்லாதீர்கள் அம்மா! அவன் ஒரு சொக்கத் தங்கம் — சுடர் மணி விளக்கு!"

"ஜெகவீரா! நீயோ டெல்லிக்குப் போகிறாய்—வர நாள் பிடிக்கும் — இப்போதே எச்சரித்து விட்டேன் — நான் சத்யவதியை தவறு கூறுகிறேன் என்று கருதாதே — தவறான பாதைக்கு அவள் சென்று விடக்கூடாது என்பதுதான் என் எண்ணம்."

"சரியம்மா — கவனித்துக் கொள்ளுங்கள்எல்லாவற்றையும். நல்லவிதமாக! நான் புறப்படுகிறேன்"

ஃ ஃ ஃ

ஜெக வீரசிம்மன், ஒரு காலத்தில் ஒரிசா மக்களின் இதய விளக்கு — பதினேழாம் நூற்றுண்டில் அந்த மண்டலத்து மாந்தர்களின் மட்டற்ற செல்வாக்கைப் பெற்ற யுவராஜன். சக்கரவர்த்தி ஷாஜகானுக்கு முடிசூட்டு விழா டில்லியில்! அன்பழைப்பு வந்திருக்கிறது ஜெகவீரனுக்கு. வீரர் ஆயிரவருடன் அவன் டெல்லிப் பயணம் புறப்படும் போதுதான் அவனது தாய் அமிர்தராணி அங்குவந்து மருமகள், சத்யவதியைப் பற்றிய புகார்களைக் கூறினாள் — விடைபெற்றுச் செல்ல வந்த வேந்தன் தாக்குண்டான், சொல் வேலால்! புள்ளி மான்களுக்குப் பரிந்து அவன் பிணமாக்கியுள்ள புலிகளுக்குக் கணக்கில்லை. களத்தில் குதித்து விட்டால், கண் மூடித் திறப்பதற்குள் கணக்கற்றோர் பிணமாவர் அவன் கத்தி வீச்சால்! அத்தகைய மாவீரனை அன்னையின் சொல்லம்புகள் சுருள வைத்து விட்டன. தன் இன்ப வாழ்வில் ஏதோ ஒரு இழுக்கு படர ஆரம்பித்துவிட்டது என்பதால் தான் அம்மா அந்த எச்சரிக்கை கணையைத் தொடுத்திருக்கிறாள் என்று எண்ணினான் — அதனால் ஏங்கினான் — டெல்லிக்குப் பயண மானான் — வாடிய முகத்தோடு!

ஃ ஃ ஃ

அவன் இருதயத்தை அரித்திடும் பிரச்சினையாகிவிட்ட சத்தியவதிஅவனதுஆசை ராணி. ஒரிசாவின் புதிய மீராபாய் இவள்தான் என்று சொல்லக்கூடியஅளவுக்கு கடவுளிடத்திலே பக்திகொண்டவள். கணவன் ஜெகவீரனிடத்திலே பிரேமையும், தன் தேசத்திடத்திலே அன்பும் கொண்ட அந்த ராணிக்கு ஓரே ஒரு குறை மட்டும் இருந்துவந்தது. அக்குறையை தீர்த்துவிட சமயத்தை எதிர்நோக்கியிருந்தாள்சத்யவதி. ஜெகவீரனின் தந்தையும் அவளது மாமனாருமான வீரசிம்ம வேந்தர் புலியொன்றினால் தாக்கப்பட்டு உயிர்விடும் தருணம், தன் மகன் ஜெகவீரனிடத்திலும் சத்யவதியிடத்திலும் தனது இளைய மகன் அர்தோலை ஒப்புவித்துபாதுகாக்கும்படி சொன்னதோடு, தன் நினைவாக—"இராமபிரான் கோயில்" ஒன்று கட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அப்போது தந்தையின் உத்திரவை நிறைவேற்றுவதாக ஜெகவீரன் வாக்களித்தான். தந்தையின் நினைவாகக் கட்டும் ஆலயம் மிகச்சிறப்புடையதாயிருக்க வேண்டும்; அதற்கு ஏராளமான பொன் வேண்டும்—பொக்கிஷ நிலை சரியில்லாத இந்த சமயத்தில் எப்படி அந்த ஆலயத்தை நிர்மாணிப்பது என்று தயங்கினான். சத்தியவதியோ மாமனுருக்கு அளித்த வாக்கை எப்படியும் நிறைவேற்ற வேண்டுமென்று துடித்துக் கிடந்தாள். மாமன் ஆசைப்படி அவரது இளைய செல்வன் அர்தோலை நன்கு பாதுகாத்தாள். அதன் காரணமாக அர்தோல், அவளைத் தன் சொந்த அன்னை போலவே பாவித்தான். ஆண்டவனுக்கு ஆலயம் விரைவில் கட்டியாக வேண்டும் என்ற ஆசையை சத்தியவதி, அடிக்கடி அர்தோலிடம் தெரிவித்துவந்தாள்.

"அர்தோல்! அரசர் டில்லியிலிருந்து திரும்ப நாளாகுமல்லவா?"

"ஆம் அம்மா! நான்கு மாதங்களாவது பிடிக்கும்."

"அதற்குள் ராமன் ஆலயத்தை நாம் எப்படியும் கட்டி முடித்து விட்டால், அவர் திரும்பி வந்ததும் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்—தெரியுமா?"

"தாயே! அது உண்மைதான்-தேவாலயத்தை நாளைக்கே எழுப்பிவிடலாம்—அதற்கான பொருள் கருவூலத்தில் இல்லையே!—"

"எங்கேயோ வைரச் சுரங்கம் இருப்பதாகச் சொன்னாயே; அது என்ன ஆயிற்று அர்தோல்!"

"ஆமாம் — இருக்கிறது — நாட்டு மக்களின் வரிப்பளுவைத் தடுக்க அந்த வைரங்களைப்பயன்படுத்தலாமென எண்ணினேன்"

"முதலில் என் மனப் பளு தீர வேண்டும்; அர்தோல்! ராமனின் ஆலயம் அமைந்துவிட்டால் நாட்டிலே எக்கேடும்கிளம்பாது. இருக்கும் தீமைகளும் அழிந்து படும்—ஆகையால் முதலில் கோயில் திருப்பணியைக் கவனி!"

"வைரச் சுரங்கத்திலிருந்து மிக ரகசியமாக வைரங்களை சேமிக்க வேண்டும்—சுரங்கம் நம் நாட்டில் இருப்பது தெரிந்தால்—உடனே சுரண்டும் டெல்லி, சூறாவளி வேகத்தில் புறப்பட்டு வரும்—வைரம் எங்கே என்று வாயைப் பிளந்தபடி!"

"சரி அர்தோல்; டெல்லியில் தான் விழாவும் வேடிக்கையுமாக இருக்கிறதே; இந்த நல்ல நேரத்தில் நாம் வைரங்களை ரகசியமாக சேமித்து, வைகுந்தநாதனின் கோயிலை கட்டி முடித்து விடுவோம்"

"கட்டளை தாயே"

சத்தியவதியின் எண்ணத்தை நிறைவேற்ற அர்தோல் புறப்பட்டு விட்டான்.

முடிசூட்டு விழாவுக்கு முன் கூட்டியே அழைக்கப்பட்டிருந்தும் ஜெகவீரனுக்குஅங்குமனம் இருப்புக் கொள்ள வில்லை. சத்யவதி சாகசக்காரியா? அல்லது பெற்றெடுத்த மாதா பொய்க் குற்றம் சுமத்துகிறாளா? அல்லது தம்பி அர்தோல் தான் துரோகம் புரிகிறானா? என்ற மனப் போராட்டம் அவன் உள்ளத்தில் குமுறி எழுந்தது. அந்தப் போரின் உச்சக் கட்டமாக அவனுக்கு ஒரிசாவிலிருந்து ஒரு ஓலையும் வந்து சேர்ந்தது. பிரித்தும் படித்தான் — மீண்டும் கண்ணை விரித்துப் படித்தான். ஆம் — அவனது அன்னை எழுதிய கடிதம் தான் அது.

அன்புச் செல்வா! அணை போடச் சொன்னேன், வெள்ளம் வருவதற்கு முன்பே! கணை தொடுக்கிறேன் என்றாய் அப்போது. இப்போது விளைவு விபரீத மாகிவிட்டது. ஒவ்வொரு அர்த்தராத்திரியிலும் அர்தோலை சந்திக்க சத்தியவதி புறப்பட்டு விடுகிறாள். இதை என்னால் மெய்ப்பிக்க முடியும், கேட்-

[5-ம் பக்கம் பார்க்க]

மு. க. எழுதும்
புதிய தொடர் கதை
புதையல்
ஜுலை 16 முதல் ஆரம்பமாகிறது.

ஜீவா-'தமிழகம் விந்தை கொளாது'

[நாஞ்சில் கி. மனோகரன்]

தோழர் நாஞ்சில் மனோகரன் அவர்கள், கழக முன்னணி வீரர் — எழுத்தாளர் — பேச்சாளர் என்பது மட்டு மல்ல — சிறந்த கவிஞருங்கூட என்பதை தனது எழுச்சி மிக்க கவிதைகளால் சொல்லாமற் சொல்லுகிறார். அவரது கவிதைகள் இனி அடிக்கடி முரசொலியில் இடம் பெறும். (ஆ—ர்)

பஞ்சையின் நெஞ்சிலே வேதனை—அவன்
பாழும் வயிற்றிலே தீப்பசி!
கஞ்சிக் கலயங் கரங்களில்—கருங்
கண்களில் சாவொளி! அச்சமே

வெம்பித் துடித்திடும் பிள்ளைகள்—அவர்
வாழ்வைக் கருக்கிடும் பட்டினி!
நம்பத் துதித்திட்ட ஆண்டவன்—அந்தி
நாதியற்றோர் நிலை கண்டிலன்!

வேலையற்றோர் தொகை கோடிகாண்—அந்த
வேதனைக் கூடுகள் மாளவோ?
சாலையோரம், குளம், குட்டைகள்—மரக்
கிளைகளெலாம் பிணக் கூட்டமா?

சாவின் மடியிலே ஏழையும்—நிதித்
தொட்டிலிலே பணக்காரனும்!
ஆவிபறித்திடும் இச்செயல்—இந்த
அகிலம் படைத்தவன் ஆர்வமாம்

விண்டனர் ஆண்டவன் சீடர்கள்—வைய
வாழ்வைப் பிடுங்கிய கழுகுகள்
கொண்டனர், சாதிகள், நீதிகள்—மதக்
குப்பைகள், தம் நிலை வாழவே

கம்பராமாயணம் கையிலே—நல்ல
கன்னித் தமிழ்மொழி நாவிலே
தம்புரு மீட்டுனர் பக்கலில்—சுவைப்
பால் பகிர்ந்து தரப் பாவைகள்!

சாமரம் வீசிடச் சீடர்கள்—அவர்
கொஞ்சிக் களித்திடச் சேடிகள்
காமனும் நாணிடும் காட்சிகள்—இது
கடவுளைக் காணுவோர் மாட்சிகள்!

சிந்தனைச் சக்தியைத் தீய்த்தனர்—மக்கள்
பகுத்தறியுந் தரந் தாழ்த்தினர்
நிந்தனை செய்பவ ரேகிடும்—கொடும்
நரகப் படுகுழி சுட்டினர்

புலம்பித் துடித்திடு மேழைகள்—துயர்
புல்லெனத் தள்ளினர்—வாழ்ந்தனர்!
அலமருமாயிரங் கோடிகள்—அவர்
அன்ன விசார மளவிலா!

இந்நிலை கண்டு கொதித்ததே—தன்
மானத் தமிழர் பரம்பரை
நந்நிலை எய்திடும் நேர்வழி—காண
நாளு முழைத்தனர். வென்றனர்

வென்றவர் வீசிய வெம்புயல் அவர்
வீறிட மூட்டிய செங்கனல்
கொன்றதடா இந்த நாட்டிலே—பழங்
குப்பைக் கருத்துரு வாழ்வினை!

பூத்தது தண்மதிவானிலே—ஒளி
சிந்திற்று வையகமெங்கணும்
பூத்தது சிந்தனை! மக்கள்தம்—உளம்
பூரிப்பிலாடியதல்லவோ?

கம்பராமாயணத் தூக்கிகள்—தம்
பாக்கியைத் தீர்த்தனர்—ஓய்ந்தனர்
நம்பிகள், நாயகர், பாடகர்—வேத
நாவலர், பாவலர் ஓடினர்!

இதோ,

வந்துவிட்டார் ஒருபாவலர்—நல்ல
மாஸ்கோ மணம் நுகர் நாவலர்
நைந்துருகுமிந்த நாட்டவர்—நிலை
நெக்குருகச் சொறும் சொல் வலான்

பூர்ஷுவாக் கவிகளைக் கொல்லுவார் — அவை
புவிக்குதவாதெனச் சொல்லுவார்
பூர்வப் பரம்பரை சாடுவோம் — எனச்
சீறிடப் பாய்ந்திடும் சிங்கமாம்

மக்கட்க் கவிக்கொரு தாரணம் — இந்த
மாநில் மேத்திடும் புஷ்கினும்
"மக்கள் கவி" எழும்பேரிடம் — மணி
மண்டப மல்ல மண்குடிசையாம்

என்றவர் ஏந்தல் எம் ஜீவா — தமிழ்
ஏந்திழை பெற்றிட்ட "காம்ரேட்"
நன்றவர் கையிலே கம்பன் — தமிழ்
நாவிலே அன்னவன் செம்பா!

கூடியழைக்கிறார் கேளீர்! — கம்பன்
பாடித் தமிழ் வளர்த்தோங்க!
நாடியழைத் திடும் விந்தை — இந்த
நானிலத் தெங்கனு மில்லை!

நெற்றியிலே திருநீறு — விரி
மார்பிலே சாம்பலும் தாவி
கற்றிட்ட கம்பனோர் கையில் ஜாலர்
கட்டை மற்றோர் கையில் தாங்கி

"சொர்க்கவாசல்" விழாகண்டு — அங்கே
சொக்கிடும் கம்பனைப் பாட
தர்க்க வாதத்தினர் ஜீவா — தாவில்
தமிழகம் விந்தை கொளாது

டால் சொல்லுகிறாள்; கோயில் கட்ட திட்டம் போடுகிறோம் என்று!—களங்கம் நமது வம்சத்தை அழித்து விடுவதற்கு முன்பு நீ புறப்பட்டு வா.

உன் அன்னை
அமிர்த ராணி

ஓலையைக்கண்ட ஜெகவீரன் தலை சுழன்றது. டில்லி பாதுஷாவின் பட்டாபிஷேக மண்டபத்திலே அமுதவீணையின் இன்ப நாதம்! வீரசிம்மனின் மனக்குகையில் அறுந்த நரம்புகளின் முறுக்குப் பிரியும் ஜீவனற்ற 'கீச்' ஒலி! அங்கே முரசின் முழக்கம், இங்கேஓரிசா அரசின் கலக்கம்-உடனே புறப்பட்டு விட்டான் தன்னகம் நோக்கி!

ஃ ஃ ஃ

இரவுநேரம். வைரம் நிறைந்த பேழை. அந்தப் பேழை தான் ராமருக்குக் கோயிலாக உருவெடுக்கப் போகிறது. கோயில் கட்டுவதற்கு முன்பே கோயிலில் வைக்க விக்கிரகம் தயாராகி விட்டது. அதன் முன்னே அமர்ந்து ராமகீர்த்தனை பாடிக் கொண்டிருக்கிறாள், சத்தியவதி. தன் மாமனாரின் அன்புக்கட்டளை நிறைவேறப் போகிறது, மணாளன் திரும்பி வரப் போகிறான். வந்ததும் ஆலயத்தைக்கண்டு அதிசயத்தால் மகிழப் போகிறான்—நாடு சுகமடைய இந்த ராமபிரான் கோயில் கொள்ளப் போகிறார்—இப்படி யெல்லாம் எண்ண அலைகள் எழும்பிட சத்தியவதி பூஜையில் ஈடுபட்டிருந்தாள். பூஜை முடிந்தது வைரங்களை எடுத்து மறைவாக வைப்பதற்காக, சத்யவதி அர்தோலை அழைத்தாள்.

"அர்தோல்! அர்தோல்!"

"இதோ வந்து விட்டேனடி கள்ளி!" என்று கூறியபடி அங்கே நுழைந்தான், ஜெகவீரன். சத்யவதி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"பிரபூ!"

"எட்டிநில்! கண்ணுக்குஅழகு தரும் காஞ்சரங்கனியே, இந்த மண்ணுக்கேஅவமானம் விளைத்த மாபாதகி! எட்டி நில்!"

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"எங்கே உன் ஆசைநாயகன் அர்தோல்?"

"ஆ! அப்படிச் சொல்லாதீர்கள் பிரபு! அர்தோல் எனக்கு மகன் போல!—அவன் என்

[8-ம் பக்கம் பார்க்க]

எப்போதும் போலத்தான் இன்றும் பம்பரம்போல கண்ணை மூடிக்கொண்டுசுழன்றுகொண்டிருந்தேன். என்றைக்குமில்லாமல் என்மேல்தளத்திலே ஒரேஎரிச்சலாக இருந்தது. வழிதவறி சூரியனுக்குப் பக்கத்தில்தான் வந்துவிட்டோமா என்று திரும்பிப் பார்த்தேன். நான் வழிதவறிவிடவில்லை; என் மீது வசிக்கும் மானிட ஜந்துக்கள்தான் தவறியிருக்கின்றன. நான் சூடானதற்கு காரணம் வேறொன்றுமில்லை; அமெரிக்க குறும்பர்கள்தான் வேடிக்கையாக என் மீது ஹைட்ரஜன் குண்டை வீசி சோதனை பார்த்திருக்கின்றனர். வயதேறிய என்னை சீக்கிரம் அழித்து விடுவார்கள் போல் இருக்கிறது. அவர்களுக்கு அது ஓர் தற்காப்புச் சாதனமாம்; பெரியதொரு விஞ்ஞான சாதனையாம்; எனக்கோ வேதனை; வேதனை! என் அழிவுக்காலம் அண்மையில் இருப்பதைக்கண்டு கண்ணீர் மல்கினேன்; என்கடல் தேக்கம் கொஞ்சம் வற்றியதுதான் நான் கண்டபலன்!

"அப்படியல்ல, உலகப்பா! இதோபார் உன்னை சாகாத சிரஞ்சீவியாக்கும் சஞ்சீவி" — என்று என் கவனத்தைக் கவர்ந்தது, ஜெனிவாவிலே கிளம்பிய கூச்சல். ஆமாம்; அங்கே உலக வல்லரசுகளின் பிரதிநிதிகள் கூடுகிறார்களாம். அதைவிட ரசமான செய்தி ஒன்று! முதன் முறையாக சிகப்புச் சீனாவின் பிரதிநிதியும் கலந்துகொள்ளப் போகிறாராம்! தித்திக்கும் செய்திதான்; என் வயிற்றில் பிறந்த செள—என்—லாயும்—அமெரிக்க டல்லசும் சம அந்தஸ்தோடு கூடிப்பேசுவது எனக்கு மகிழ்ச்சி தாராதா என்ன? இந்தயோசனை முன்பே உதயமாகி—கியாங்கின் பிற்போக்கு சீனாவை ஐ. நா. விலிருந்து விரட்டியிருந்தால்—அதற்குப் பதிலாக மாசே துங்கை அழைத்திருந்தால் சாயம் போன புடவை திரும்பவும் வெள்ளைப் பஞ்சாக மாறியதைப்போல இருந்திருக்கும்; இந்த மாநாடுகூட்டுவதன்தேவையே இருந்திருக்காது. இப்போது தான் என்ன கெட்டுவிட்டது?

ஃ ஃ ஃ

ஆமாம்; எல்லாம் கெட்டுத் தான் போய்விட்டது. புதிய சீனாவை அழைத்தார்களே இனிமேல் அமெரிக்க மக்களிடையே மெக்கார்திகள் மறைந்துவிட்டார்கள்; ஐசன் ஹோவர் துரைக்கு மண்டைபெருத்து பரந்த மனப்பான்மை உதயமாகி விட்டது என்று நான் எண்ணியதெல்லாம் கனவாய்த்தான் போய்விடும்போல் இருக்கிறது. கூடிக்கூடி பேசினார்கள்; கதவை மூடிக்கொண்டு, 'குசு குசு' வென்று பேசினார்கள்; முடிவு எப்போதும் போலத் தான்! கொரியப் பிரச்னை வழக்கம் போல ஐ. நா. சபைக்குப் போகிறது—வளர்த்தவன் கை விட்ட மாடு பட்டியிலே இருந்

[7-ம் பக்கம் பார்க்க]

சினிமா ரசிகர்களுக்கான ஓர் அரிய பொக்கிஷம்

●

விற்பனையாகிறது!

பேசும் படம் மலர் 1954

★

கனம் சி. சுப்ரமணியம், மு. கருணாநிதி கொத்தமங்கலம் சுப்பு, வி. ஸி. கோபால ரத்னம் முதலிய பல அறிஞர்களும்

ஏ. நாகேஸ்வர ராவ் ஏ. எம். ராஜா, சந்திர பாபு, மைனுவதி, பி. கே. சரஸ்வதி, சூரியகலா முதலிய பல நக்ஷத்திரங்களும் எழுதியிருக்கிறார்கள்

சினிமா நக்ஷத்திரங்களின் முழுப் பக்க மூவர்ணப் படங்கள்

இன்னும் பல பல விசேஷ அம்சங்கள்

9½"×7¼" விலை ரூ. 5. தபாலில் ரூ 5-8-0

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை-14.

வாழ முடியுமா?

[உருவகச் சித்திரம்]

மேல்திசை வான மண்டலத்தே போர்க்களத்தை நினைவுறுத்தும் மாலையின் இரத்தத்திரை! ... சமாதிக் கருகே காணும் சாகாத அமைதி! ...

அந்த அமைதிக்குப் பங்கமூட்டும் பெரும் குரல் ... ஓயாத ஒரே குரல் ... அகண்ட ஆழ் கடலின் அலை ஓசை! ...

பொங்கித் தணியா அந்தக் கடல் மாதின் போர்க்கோலம் கண்டு, கேலிப் புன்னகை வெடித்தாள் பக்கத்திலிருந்த நிலமடந்தை. "பேதைப் பெண்ணே! காலமெல்லாம் கத்திக் கதறி மாய்கிறாயே, ஏனோ இந்த ஓயாத உறுமல்?"

"கிண்டல் வேண்டாமடி, என் நெஞ்சகப் புண் காணாதவளே! என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பொங்கி எழும் சூறாவளிப் பெருமூச்சின் மறுப்பதிவுதானடி இந்த பிரளய ஓலம்!"—பொறுமை பலிச்சிட புலம்பினாள் கடல் கன்னி.

"பெருமூச்சா? விஷப் பேச்சு! வேதனையான வாய்வீச்சு!"

கிள்ளி விடப்பட்ட சிசுவைப் போல துள்ளித் துடித்துப் பேசினாள், சகிக்க முடியாத வேதனையைத் தாங்க முடியாத நீர்ப்பெண். "சிரிக்கும் சிங்காரியே! கேளடி என் கேடான வாழ்வை! ... என்னிடமோ ஜொலிக்கும் முத்துண்டு; சிரிக்கும் பவழமுண்டு; ... ஆனால் என் மடியிலே தவழ்ந்து விளையாட ஆணில்லை; பெண்ணில்லை; ஐயகோ! காண்போர் எல்லாம் கலங்கி ஓடுவானேன்? உன்னிடம் மட்டும் கொஞ்சிப் பேசுவானேன் — கொண்டாட்டம் போடுவானேன் — என் மதிப்பறியா அந்த மானிடக் கூட்டம்? சொல்லடி!"

நில மங்கை சொன்னாள்: "ஆத்திரப்படும் அலைகடலே! காரணம் வேண்டும் காரிகையே! கேட்பாய் இதோ, உன் உடல் கருநீலம் — உள்ளம் பெரும் கருப்பு — பெருமூச்சோ கரு நாகத்தின் விஷமூச்சு! ஆகவேதான் அண்டவும் கலங்குகிறது மானிட வர்க்கம். பொறுமைப் பிண்டமே! பேராசைச் சுரங்கமே! உனக்கேனடி இந்த வேண்டாத ஆசை—விபரீத எண்ணம்!"

பொங்கி விட்ட எரிமலையாய் கொதித்தாள் கடலரசி. "விபரீத ஆசையோ? விளக்கம் தரும் கள்ளப் பெண்ணே! பாரடிபார்! பலிக்கிறது என் ஆசை!" என்று குரல் உயர்த்திக் கொக்கரித்தாள்.

அந்நேரம், பெருங்கடலின் நீள்விளிம்பைக் காணத் துடிக்கும் நெஞ்சத்தோடோ—தவிக்கும் அலைகண்டு கை கொட்டும் களிப்போடோ—கடலழகியின் கரையோரம் ஓடிவந்தாள் ஓர் ஒய்யாரச் சிறுமி. கடல் பெண்ணோ புதுக்குரல் எழுப்பினாள்... வெறி பிடித்துக் கத்தினாள் ... அகண்ட அலைக்கரம் நீட்டி அந்த அழகுப் பெட்டகத்தை அள்ளி அணைத்தாள்.

"ஜாலப் பேயே! வேண்டாமடி விஷப்பரிட்சை" — அங்கமெல்லாம் துடித்திட அலறினாள் நிலநங்கை.

ஆனால் ... மதுக் கலயம் கையிலேந்திய போதைப் பித்தனைப்போல வெண்நுரை காட்டி பல்லிளித்தாள் — இடிபென சிரித்தாள் — மார்போடு கட்டி யணைத்தாள் அந்தக் கன்னிச் செல்வத்தை — அப்பாழும் நீர்ப் பதுமை.

"ஓ" வென்றலறினாள் ஓடி வந்த பாப்பா ... அந்த மரணக் குரலோ மங்கி மறைந்தது சமுத்திர சுந்தரியின் ஓங்காரக் கூச்சலிடையே!

ஃ ஃ ஃ

மேல் திசையில் சிறைபட்ட செங்கதிரோன் கீழ்த்திசையில் விடுதலை பெற்றான் ... பொழுது புலர்ந்தது புது நாள் வரவுகூறி!

வேண்டாத பொருளை ஒதுக்கி வீசும் பண்பினளாய் ... தீண்டாதப் பொருளே அன்ன தன் கரம் நீட்டி தள்ளி விட்டாள் நீர் மடந்தை, ஓர் உருவை — கட்டி அணைத்து ஜீவன் பறித்த அந்த முல்லைப்பல் முத்துப் பெண்ணை!

எனினும் கத்தினாள் ... தணியாத தாகத்தால் ...

ஆனால் நிலப்பெண்ணோ தன்னிடம் தவழ்ந்து கிடந்த அந்த மாண்டு விட்ட மழலைச் செல்வத்தை தென்றலெனும் பரிவுக் கரம் நீட்டித் தொட்டுத் தடவினாள்; கனல் கக்க கடலைப் பார்த்தாள். "அலைமோதும் அரூபப்பேயே! பாரடி உன் நெஞ்சம் பெற்ற பேராசைக்கோர் பலியை! மோகவெறி கொண்டவளே! உயிரோடு பறித்தாய் என் உயரிய செல்வத்தை — சவமாகத் தருகிறாய் — ஏற்கிறேன் நான் — ஏன்? — அவள் எனக்கே உரியவள்! எனக்கே உரியவள்!" என்று ஏக்கம் பேசினாள்.

வெறி குன்றாத கடல் மாதோ வாய் பிளந்து உறுமுகிறாள் ... அகண்ட கரம் விரித்து ஓலமிடுகிறாள் ... ஓயாது ஓலமிடுகிறாள்...

— சொர்ணம்

உலகம் எழுதிய...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் என்னகாளி கோயிலுக்குப் போனால் என்ன? எல்லாம் ஒன்றுதானே.

° ° °

ஆமாம்; எல்லாம் ஒன்றாகத் தான் போய்விட்டது. காலனி வளர்ப்புக் கொள்கையையும்—கம்யூனிச ஒழிப்புக் கொள்கையையும் அமெரிக்கா ஒன்றாகத் தான் மதிப்பது போல் தெரிகிறது. இல்லாவிட்டால் கம்யூனிசத்தை ஆசியாவைவிட்டு ஓட்டுவதற்காகத்தான் இந்தோ சீனாவிற்கு துருப்புகளையும்—துப்பு கொடுக்கும் உளவாளிகளையும் தந்து உதவுவதாக சொல்லிக் கொண்டிருக்கும் அமெரிக்கா, பாண்டிச்சேரிக்கு துப்பாக்கிகளை அனுப்பிவைக்குமா? இந்த அமெரிக்க துரைகள் பைத்தியக்காரன் போதை அருந்தியதைப் போல ஒரே கூத்தடிக்கிறார்கள்; இந்த அக்ரமத்திற்கு முடிவே கிடையாதா?

° ° °

"இதோ இருக்கிறது ஒரு முடிவு"—என்றபடி ஜெனிவாவிலே கம்யூனிஸ்டுகள் கொஞ்சம் சலுகை காட்டினர். ஜூலை மாதத்திற்குள் இந்தோசீனத்தில் போர் நின்றுவிடுமாம்; எல்லைக் கோடு விஷயத்தில் உடன்பாடு ஏற்பட்டு வருகிறதாம்! அப்பப்பா! என் மீது மழை பொழிவது போன்ற மகிழ்ச்சி எனக்கு. இந்த மகிழ்ச்சி என்றும் நீடிக்குமா? ஜெனிவா மாநாடு இதைச் சாதிக்குமா?

° ° °

"எப்படி முடியும்?"—என்று எரிமலை குமுறுவதைப் போல ஒருஓசை என்காதைப்பிளந்தது. ஆமாம்; என் இன்பத்தைக் கொள்ளையடிக்க முறுக்கு மீசையுடன் அமெரிக்க பெரும் பூதம் எனக்கெதிரே நின்று கொண்டிருந்தது. "இந்தோ சீனத்தில் அமைதி நிலவப் போவதைப் பற்றிய உவகையிலா மூழ்கியிருக்கிறாய்; இதோ பார் உன் எண்ணக் குவியல் சிதைந்து நிற்பதை"—என்று அமெரிக்கன் என்னைப்பார்த்துச் சொன்னான். அவன் கைவிரல் நீட்டிய பக்கம் என் பார்வையைச் செலுத்தினேன். இதுவரை ஆசியாவிலே 'சடுகுடு' ஆடிய அமெரிக்கச்—சிறுவன் இப்போது வட அமெரிக்காவுக்கு தன் "கேம்பை" மாற்றியிருக்கிறான். ஆமாம்; சாரை சாரையாக குவாடிமாலா குடியரசுக்குள் ஆக்ரமிப்பாளர்கள் முன்னேறியபடி இருக்கின்றனர். அவர்கள் கையிலே உள்ள ஆயுதங்களில் "மேட்—இன் அமெரிக்கா" என்று எழுதியிருந்தது. என்னால்இதை நம்பவே முடியவில்லை. கொஞ்சம், என் போன மாத டைரியைப் புரட்டினேன். இப்போதுதான் எனக்கு விபரம் விளங்குகிறது. குவாடிமாலா, குடியரசுக்காரர்கள் சில ஆண்டுகளுக்கு முன் நிலத்தையெல்லாம் பொதுவுடைமையாக்கிவிட்டனர்; இதனால் சில அமெரிக்க பிரபுக்கள் பாதிக்கப்பட்டு சொந்த நாட்டிற்கு ஓடிவிட்டனராம். அந்த புதுமைக் கருத்துக்கள் பூத்துக் குலுங்கும் பூங்காவனம் சிகப்பாகி விடக் கூடாதே என்ற கவலை அதிகமாகி அதனால்தான்அந்த குடியரசைக் கவிழ்க்க அமெரிக்கா முடிவு செய்துவிட்டதாம். அதன் விளைவாகத்தான் சின்னஞ்சிறிய குவாடிமாலா இப்போது கருகுகிறாள்; செருக்கித் திரியும் ஆதிபத்யவாதிகளின் விளையாட்டுக் கூடமாகமாறி தவியாய்த் தவிக்கிறாள்...... ஆம்!

° ° °

ஆமாம்; தவிக்கிறார்கள். சோற்றுக் கில்லாமல் தவிப்பவர் எத்தனை கோடி பேர் தெரியுமா?

° ° °

அது எனக்குத் தெரிய வேண்டியதில்லை—என்ற பேச்சு வந்த பக்கம் என் தலையைத் திருப்பினேன். தென்னிந்தியாவில் வசிக்கும் திருப்பதி ஏழுமலையானுக்கு இரண்டரை லட்சம் செலவில் ஒரு வைகுண்ட அஸ்தம் செய்து படைக்கப் போகிறார்களாம்.

இன்னொரு சத்தான சேதி—காஞ்சிபுரம் ஸ்ரீதேவராஜ ஸ்வாமி ரதம் 5-மணி நேரத்தில் நிலைக்கு வந்து சேர்ந்திருக்கிறது. இதுவரை இவ்வளவு சீக்கிரம் அது நிலைக்கு வந்ததே கிடையாது. சே! சே! உலகம் மிகக் கெட்டுவிட்டது! °

போட்டி போடாதீர்...

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

குறிப்பு:—

தோழர் கல்கியார் ஜூன் 20-ம்தேதி கல்கி இதழில் "போட்டி போடாதீர்!" என்று ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறார். அதைத் தழுவி இந்தக் கட்டுரை நம்மால் எழுதப்பட்டது. பெரும்பாலும் இந்தக் கட்டுரையில் வந்துள்ள வாசகங்கள் பல கல்கியில் வந்தவைதான். (ஆ-ர்)

முரசொலி

ஜூலை போராட்ட இதழ்
[அதிக பக்கங்களுடன்]

★

ஜூலை 16-ம் நாள் எங்கும் கிடைக்கும்

○

அண்ணாவும் முன்னணி வீரர்கள் அனைவரும் எழுதுகிறார்கள்.

○

மு. க. வின் புதிய தொடர் கதையுடன் பூக்க இருக்கிறது.

○

அதிகமான பிரதிகள் விரும்பும் விற்பனையாளர்கள் தேவையான முன் பணத்துடன் எழுதுக.

தென்றல்

●

தோழர் கண்ணதாசனின் 'தென்றல்' கிடைக்கப் பெற்றோம்.

"தென்றல் உங்களைத் 'தீண்ட' வருகிறது — ஆம்; தென்றல் தான் மனிதனைத் 'தீண்டு' கிறது. இதோ — தென்றல், 'தானாக வந்து உங்களைத் தீண்டுகிறது' அந்தத் தீண்டுதலில் நயமிருந்தால் – நளினமிருந்தால் வாரம் இரண்டணாக் கொடுங்கள்" என்று கண்ணதாசன் தன் எண்ணத்தை பத்திரிகை மூலம் தெரியப் படுத்தியுள்ளார். 'கண்மணி' யே என்றால் கண்ணை மட்டும் குறிப்பிடாமல், காதலியையும் குறிப்பிடுவது போல — கற்கண்டே என்றால் கற்கண்டை மட்டும் குறிப்பிடாமல் குழந்தையையும் குறிப்பிடுவது போல — தென்றல் என்று இன்பத்தையும் குறிப்பிடலாம். அத்தகைய இன்ப ஏடு — இனிய தமிழ் ஏடு — இலக்கியத் திரு ஏடு — தென்றல் என்று கூறலாம். இன்பத்தை தீண்டியதில்லை — ஆம் தென்றலைத் தீண்டியதில்லை — என்று கூறிடுவோர் மத்தியிலே நல்ல தமிழ் மொண்டு வரும் தென்றல் நாளும் பல தொண்டு செய்யும் என நம்புகிறோம். தென்றலை வாழ்த்துகிறோம். °

மாலைமணி

●

சிறந்த எழுத்தாளர் தோழர் கே. ஜி. ராதாமணாளன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மாலைமணி, மீண்டும் தினசரி இதழாக வெளி வந்திருக்கிறது. ராதாமணாளனின் எழுச்சி மிக்க வார்த்தைகளும் — அரசியல் கருத்துக்களும் – இடம் பெறுவதோடு, அன்றாடச் செய்திகளும் தாங்கி நல்ல முறையில் பத்திரிகை அமைந்திருக்கிறது.

பொல்லாத நூலாம் திருக்குறள்!
பொருந்துமா? சரி தானா?

மீ. சு. இளமுருகுபொற்செல்வி எழுதிய

திருக்குறள்
பொல்லாத நூல் 0-4-0

விற்பனையாளர் கழிவு உண்டு
தபாற் செலவு தனி

தேவைக்கு:—
நம் நாட்டுப் பண்ணை
மணப்பாறை—திருச்சி மாவட்டம்.

"முயற்சி"

திராவிட முற்போக்கு இதழ்

ஜூன் 15 முதல் திங்கள் இருமுறையாக வெளிவருகிறது. விற்பனையாளர்கள் தேவை.

நிர்வாகி: 'முயற்சி' அலுவலகம்
27, ஆதிமூலம்பிள்ளை சந்து
வடக்காவணிமூல வீதி, மதுரை.

கடைசிப்பக்கம்

அ. இராமு.—மதுரை.

(?) ரஷ்யாவிலே பொதுவுடைமை வாதிகள் மதம் முன்னேற்றத்தின் முட்டுக்கட்டை என்கிறார்கள்; ஆனால் ஜீவானந்தம் இங்கு கம்பராமாயண விளக்கவுரை செய்கிறாரே; ஏன்?

இது தெரியாதா? மார்க்ஸ் எழுதிய நூலில் ஒரு ஏடு காணமற்போய், அது இப்போது தான் அகப்பட்டதாம். அதில் இருக்கிறதாம் கம்யூனிஸ்டுகள் கம்பராமாயணப் பிரசங்கம் செய்ய வேண்டுமென்று!

(?) கம்பராமாயணத்தில் உள்ள நல்ல பகுதிகளைச் சொல்வது தவறு?

பாம்பின் பளபளப்பு நிறைந்த அழகை மட்டும் வர்ணித்தால் போதாது; அதன் பல்லிடுக்கில் உள்ள விஷத்தையும் சொல்லியாக வேண்டும்.

திருவேங்கடம்—பல்லடம்.

(?) ஐ. நா. சபையால் பயனொன்றுமில்லாத போது அது ஏன் இருக்க வேண்டும்?

சில ஆடுகளுக்கு எந்தப் பயனுமே யில்லாமல் முகவாய்க் கட்டைப் பக்கம் இரு தாடிகள் தொங்கும்—அந்த தாடி ஒரு உதாரணத்துக்காகப் பயன் படட்டும் என்பதற்காகவே எடுத்துக்காட்டாக ஐ. நா. விளங்குகிறது.

கே. எம். பி. கனகராஜ், கிளாத்தோட்டம் — கோட்டகளை

(?) ஒருவன் அரசியல் வாதியாக வருவதற்கு எதுவரை படித்திருக்க வேண்டும்?

இருதயத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டிய புத்தகத்தை படிக்காமல் வேறு எத்தனை பெரிய படிப்பு படித்திருந்தாலும் அந்த அரசியல்வாதியின் படிப்பு பூரணத்துவம் அடைந்தது என்று யாரும் கூற முடியாது.

மோய்தீன்—ராயப்பேட்டை

(?) சரித்திரத்தில் வரும் 'அந்தக் காலத்தில்' நாம் வாழ்ந்ததைப் போல இந்த காலத்தில் ஏன் செழிப்போடு வாழ முடியவில்லை?

அப்படிப்பட்ட வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதற்காகத்தான் நாம் திராவிட நாடு கேட்கிறோம்.

(?) கணவன் ஒரு கட்சி-மனைவியோ அதற்கு முற்றிலும் மாறுபட்ட வேறொரு கட்சி; இவர்களது குடும்பம் எப்படியிருக்கும்?

எப்படியிருக்குமா? சிறந்த எதிர்க்கட்சித் தலைவர்களையும்—அவர்களுக்கு நேர்மையாகப் பதில் தந்து ஈடுகொடுக்கும் அமைச்சர்களையும் தயார் செய்யும்சர்வகலாசாலையாக இருக்கும்.

பி. ஏழுமலை—சென்னை 1.

(?) நேதாஜியைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

தேசியத்தார் செய்யும் அக்ரமங்கள்—ஜனநாயகக் கொலைகள்—இவைகளை—யெல்லாம் பார்க்கக் கொடுத்து வைக்காத பாக்கியவான் அவர்!

செங்குட்டுவன் – கல்லகுடி

(?) மோட்சம் நரகம் இவை இரண்டும் எங்கிருக்கிறது?

மோட்சத்தைப் பற்றி பேசுகிறார்களே அவர்கள் முதுகிலேயே நரகமும் உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

○

விஷம் இனி...

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆசைச் செல்வன்."

"மகனோடுதான் நடு ராத்திரியிலே—தனியிடத்திலே—அடிக்கடி சந்தித்துபேசுகிறாயாக்கும்"

"ஆமாம்—அதில்என்ன தவறு! ஆண்டவனுக்கு ஆலயம்அமைக்க அர்தோலுடன் பேசினேன் — திட்டங்கள் தீட்டினோம்—திருப்பணி ஆரம்பமாகிவிட்டது!"

"நீயே! போதும் நிறுத்து—"

"இதோ—இந்த வைரங்களைப் பாருங்கள் பிரபு-ராமர் ஆலயம் கட்டுவதற்குச் சேர்த்தவை-இப்போதாவது நம்புங்கள்."

"ஆலயம் கட்ட அல்லடி வைரம்! அர்தோல், உன் ஆலிங்கனத்துக்குத் தந்த பரிசு இது! தெரியும் எனக்கு!"

"அய்யோ! அய்யோ!"

"ஏனடி காதைமூடிக்கொள்ளுகிறாய் – கண்ணைமூடிக்கொண்டு காமக்கடலில் விழுந்துவிட்டு, ஊரைஏமாற்றராமக்கடவுளை பூஜிப்பவளே! பாசாங்கு செய்யாதே'

"பிரபூ-என்கற்பை இகழாதீர்கள். என் இருதயத்தின் சாபத்துக்கு இரையாகாதீர்கள்"

"என்னடி நீலி! - அர்தோல் மீது உனக்கு கள்ளக் காதல் இல்லையானால் – இதோ இந்த விஷத்தை உன் கையாலேயே அவனுக்குக் கொடு பார்ப்போம்'

"அவனுக்கா—வேண்டாம்— நானே சாப்பிட்டு சாகிறேன்!"

'முடியாது! அர்தோல் உன் கையால் விஷம்அருந்தவேண்டும் [illegible] ஆகட்டும்!"

ச[illegible]தியவதி விஷத்தை வாங்கிக்கொண்டு ஓடுகிறாள்.

தேவாலாயத் திட்டங்களைப் போட்டவாறு இருந்தஅர்தோல், அயர்ந்து தூங்கிவிட்டான். அப்போதுதான் கையில் விஷக் கோப்பையுடன் அங்[illegible]வதி நுழைந்தாள்.

"அர்தோல்!"

"என்னம்மா!"

"இந்தா—இந்த[illegible]"

"பாலா? இந்நே[illegible]"

"ஆமாம்—என்னை[illegible]யென நிரூபிக்க நீ இந்தப் பாஷாணம் கலந்த பாலை சாப்பிட வேண்டும்."

"என்ன?—தாங்கள்—?"

"உன் ஆசை நாயகியென குற்றம் சாட்டிவிட்டார் அரசர்—இல்லை யென்பதை நிரூபிக்க, என் கையாலேயே நீ விஷம் சாப்பிட வேண்டுமாம்."

"ஆ! அம்மா — யார் கட்டிவிட்ட பழி இது! — அரசரா நம்பினார் இதை! என் அண்ணா, இந்த வீண் புகார்களை நம்பி, தம்பியைத் தகாப் போக்குடையோன் எனக் கூறவும் துணிந்து விட்டாரா! அண்ணா! அண்ணா என் மனம் புண்ணாகும்படி ஏன் அண்ணா அப்படிப் பேசினீர்கள் அய்யோ அம்மா — என்னால் தாங்க முடியவில்லையே!"

"பேச நேரமில்லை—அர்தோல்! என் அன்பு மகனே, நீ விஷத்தை சாப்பிட்டால்தான் ராஜபுத்ர வம்சத்தின் மானமே காப்பாற்றப்படும்."

"சாப்பிடுகிறேன்—ஏ! விஷமே—நீ தான் என் அன்னையை அவதூறிலிருந்து காப்பாற்றுகிறாய். ராமருக்குக் கோயில் கட்டிட துவங்கினோம்—ராமர்சிலையும் அழகாக செதுக்கினோம்—அந்த ராமரோ—அவர் பரிவாரமோ வந்து என் அன்னையின் தூய்மையை என் அண்ணாவிடம் சொல்லத் துணிந்திடவில்லை! தாயின் மீது, புரியாதார் சுமத்தும் பழியை விஷமே — நீயாவது துடைக்க வந்தாயே! உனக்கு நன்றி! விஷம் இனிது! விஷம் மிக இனிது! ஆண்டவனைவிட இனிது! நம்பினோருக்கு கை கொடுக்காத ராமபிரானைவிட இந்த விஷம் இனிது" என்று கூறியபடி சத்தியவதியின் கையிலிருந்த விஷத்தை வாங்கி குடித்தான்—வீழ்ந்தான்—இறந்தான். சத்தியவதி கண்ணீரால் அவனைக் குளிப்பாட்டினாள். தன் தவறைப் பிறகு தானே உணர்ந்து நொந்தான் ஜெகவீரன்! அமிர்தராணியும் பிறகு அழுதாள். எல்லோரும் காரியம் முடிந்த பிறகு கண்ணீர் வடித்துப் புலம்பினார்கள். அப்படிப் புலம்பாமலிருக்க, அய்யன் ராமபிரான் ஜெகவீரனிடம் வந்து, சத்யவதியின் தூய்மையை எடுத்துக் கூறியிருக்கலாம்! எப்படிக்கூற முடியும்—கூறியிருந்தால், — அர்தோல் ஆண்டவனைவிட ஆலகாலம் இனிது என்று கூறி யிருக்க மாட்டானே!

★

வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழக மாநாடுகள்

○

ஜூன் 26, 27,ம் தேதிகளில் வேலூரில் நடைபெறும்

சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்	தலைவர்
ஈழத்தடிகள்	**கே. ஏ. மதியழகன்**
திறப்பாளர்	திறப்பாளர்
இரா. நெடுஞ்செழியன்	**நாஞ்சில் மனோகரன்**

ஓவியக் கண் காட்சித் திறப்பாளர்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

வரவேற்புக்குழுத் தலைவர்கள் :—மா. பா. சாரதி எம்.சி,, எ. எல். சி. கிருஷ்ணசாமி,

செயலாளர் :—வி. ஆர். ஆதிமூலம், போளூர் சுப்ரமணியம்

பொருளாளர் :— வி. எஸ். ரங்கநாதன்

●

இரு நாட்களிலும் புதுமை நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரின் 'அம்மையப்பன்' 'சந்திரமோகன்' நாடகங்கள் நடைபெறும்

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்: 62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.